
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1127

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

46

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# ‘தடா’ காலத்தில் கலைஞரின் முழக்கம்!



ஓவியம் : ரவி பேலட்

*1991-ஆம் ஆண்டு, கழக ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற தேர்தலில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தினால் எழுந்த அனுதாப அலையால் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தார் அம்மையார் ஜெயலலிதா. தமிழ்நாட்டு அரசியலில் இருண்ட காலம், கொடூர காலம் என்றால், 1991-1995 ஆண்டுக்காலம் தான் என எழுதுவர் அரசியல் நோக்கர்கள். தமிழ்நாட்டு அரசியல் சூழல், கடுமையான அச்சுறுத்தல்களால் நிரம்பியிருந்தது.*

*1991-இல் அம்மையார் ஆட்சிக்கு வந்த பின்னர், உடனடியாகத் தடா சட்டத்தை அறிவித்தார். பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தை (Terrorists and Disruptive Activities (Prevention) Act, 1987) அறிவித்து, அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையை உருவாக்கினார். 1987-ஆம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை மாநிலங்கள் விரும்பினால் செயல்படுத்தலாம் என்கிற நிலையில், 1989 ஆட்சிக்காலத்தில் கலைஞர் அந்தச் சட்டத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்து வைத்திருந்தார். அந்தச் சட்டத்தைத்தான் அம்மையார் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தார்.*

*தேசப் பாதுகாப்பு தொடர்பாக என அடுத்தடுத்து தமிழ்நாட்டு எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டனர். ராஜீவ் காந்தி வழக்கில் தொடர்புடையவர்கள் மட்டுமல்லாமல் ஆதரவு சக்திகள், கழகத்தினர் எனப் பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், அரசின் நிர்வாக நடவடிக்கைகள் அரசியல் நோக்கத்துடன் செயல்படுகின்றன என்று அதற்கு எதிர்ப்புக்குரல் கொடுத்து, தடுப்பு அரணாக நின்றார் கலைஞர். அரசியல் பதற்றமான சூழலில்தான் 8 ஜூன் 1992 அன்று அம்மையார் அரசு வெளியிட்ட G.O.MS.NO.972 (Home-Prison-B) என்ற அரசாணை, சிறை நிர்வாக விதிகளில் மாற்றம் செய்யப்படும் அறிவிப்பினைச் சொன்னது.*

*குறிப்பாக, சில வகை கைதிகள் யாரை சந்திக்கலாம் என்பதில் கட்டுப்பாடுகளை விதித்தது. பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு காரணங்களுக்காக வெளியிடப்பட்டதாக அரசு கூறினாலும், நடைமுறையில் அது அரசியல் கைதிகள் மற்றும் எதிர்க்கட்சி தொடர்புடையவர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து சென்னை உயர் நீதிமன்றம் சென்றது கழகம். குறிப்பாக, அந்த அரசாணையின்மூலம், கைது செய்யப்பட்டவர்களைச் சம்பந்தப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள்கூட சந்திக்க முடியாத நிலை உருவானது.*

### நீதிமன்ற கண்காணிப்பு வேண்டும்

*கழகத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சிறைக்கட்டுப்பாடுகள் தொடர்பான அரசாணை வெளிப்படையாக நிர்வாக நடவடிக்கை என்றாலும், அதன் விளைவுகள் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளைப் பாதிக்கிறது என்ற வாதத்தை முன்வைத்தது.*

*சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில், கழகத்தின் சார்பில் அரசியலமைப்பின் பிரிவுகள் 14 மற்றும் 19 பிரிவு 21 ஆகிய அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று வாதிட்டது. குறிப்பாக, சிறைக் கைதிகளும்கூட அரசியலமைப்பின் பாதுகாப்புக்குள் உள்ளவர்கள்; அவர்களை தனிப்பட்ட வகையாகப் பிரித்துக் கட்டுப்படுத்துவது சமத்துவத்துக்கு முரணானது என்கிற வாதத்தை வைத்தார் கலைஞர். தமிழ்நாடு அரசின் கைது நடவடிக்கைகள் அரசியல் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுவதால், அவற்றை நீதிமன்றக் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.*

*தமிழ்நாடு அரசின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், மாநிலப் பாதுகாப்பு மற்றும் சிறை ஒழுங்கை உறுதிசெய்வது அரசின் கடமை என்றும் அரசியல் நோக்கத்துடன் கூறப்படும் குற்றச்சாட்டு என்பதால், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. சட்டம் ஒழுங்கு நிலைமை, குற்றங்களின் தன்மை மற்றும் பாதுகாப்பு தேவைகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு அரசு விதிகள் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், இது ஓர் அரசியல் கட்சியையோ நபரையோ குறிவைக்கும் நடவடிக்கை அல்ல என்றும், அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.*

*இந்த வழக்கு நடைபெற்ற 1992-ஆம் ஆண்டு முதல் 1994 வரை தமிழ்நாட்டின் அரசியல் களம் மிகுந்த பதற்றம் நிறைந்ததாக இருந்தது. நீதிமன்றத்தில் மட்டுமல்ல; சட்டமன்றத்திலும் கடுமையான வாதத்தை வைத்தது கழகம். அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடும் போராட்டத்தை நடத்தியது கழகம்.*

*தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட கைதிகளை, குடும்ப உறவினர் அல்லாதவர்கள் சந்திப்பது தொடர்பான இந்த வழக்கின் தீர்ப்பு, 1994-ஆம் ஆண்டு, பிப்ரவரி 4-ஆம் தேதி வெளியானது. தமிழ்நாடு அரசின் அரசாணையை நீதிமன்றம் ரத்து செய்யவில்லை என்றாலும், அரசின் அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தின் வரம்புக்குள் இருக்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட்டது. அரசாணையைச் செயல்படுத்துகையில், அது அரசமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளை மீறக்கூடாது. குறிப்பாக, அரசின் நிர்வாக நடவடிக்கைகள் அரசியல் நோக்கத்துடன் பயன்படுத்தப்படக் கூடாது என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது.*

> **முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தினால் எழுந்த அனுதாப அலையால் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தார் அம்மையார் ஜெயலலிதா. தமிழ்நாட்டு அரசியலில் இருண்ட காலம், கொடூர காலம் என்றால், 1991-1995 ஆண்டுக்காலம்தான்.**

*இந்த வழக்கு தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக இருந்தது. அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர், நேரடியாக அரசின் நடவடிக்கையை எதிர்த்து, அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் உரிமையை நிலைநாட்டக் கோரினார். அதன்பின்னரே, அரசியல் கைதிகளை வழக்கறிஞர்கள் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது. அரசியல் பழிவாங்கல் காரணமாகக் கைதுசெய்வது குறைந்தது.*

*இந்த வழக்கு, ஒரு தனிப்பட்ட அரசாணை பற்றிய சட்டப் பிரச்சினையாக மட்டுமல்லாமல், மாநிலத்தின் நிர்வாக அதிகாரம், சிறைக்கைதிகளுக்கு அரசியலமைப்புச் சட்ட உரிமைகள் ஆகியவற்றைப் பேசவைக்கும் வரலாற்றுச் சம்பவமாகவும் அது திகழ்கிறது. சிறைக்கைதிகளுக்கு சட்டபூர்வ உரிமைகள் வழங்க வேண்டும் என இந்த வழக்கு தொடர்ந்த காலத்திலேயே, தடா சட்டத்தை எதிர்த்து மக்கள் மன்றத்திலும் போராட்டத்தை முன்னெடுத்தார் கலைஞர். ஆளுநரிடம் மனு அளிக்க அமைதியான முறையில் சென்ற பேரணியில், காவல் துறையை ஏவினார் அம்மையார் ஜெயலலிதா. எண்ணற்றோர் படுகாயமடைந்தனர். தனசேகரன் என்கிற கழகத் தோழர், துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தார்.*

**...தொடரும்**

## பொதுவுடைமைப் போராளிகளுக்கு நினைவுத்தூண்!

**சே**லம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளுக்கான நினைவுத்தூண் மண்டபம் கட்டுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதுகுறித்து பதிவிட்டுள்ள யாழ் திலீபன் என்பவர், ‘இந்திய சுதந்திரத்திற்குச் சில மாதங்களுக்கு முன்பே, அன்றைய இடைக்கால அரசின் நடவடிக்கைகளால் நாடெங்கும் கம்யூனிஸ்ட்டுகளைத் தேடித்தேடி கைது செய்தது காவல் துறை. அதனால், கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலர் தலைமறைவு வாழ்க்கைக்கு ஆளாயினர்.

தமிழ்நாட்டில் தலைமறைவாக வேண்டிய கட்டாயத்தில் இருந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்களில் திராவிட இயக்கத்தினருக்குப் பங்கு உண்டு. தோழர் ஜீவானந்தம், மணலி கந்தசாமி போன்றோரை விடுதலை ஆசிரியர் குத்தூசி குருசாமி தன் வீட்டில் பாதுகாத்திருக்கிறார். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தோழர் ஜீவானந்தத்தை சில காலம் பாதுகாத்து வைத்தார். சிக்கியவர்களைச் சித்ரவதை செய்து, சிறையில் தள்ளி, கொடுமைப்படுத்தியது அரசாங்கம். சேலம் மத்திய சிறையில் கம்யூனிஸ்ட்டுகள்மீது அடக்குமுறை ஏவப்பட்டது. குற்றச்செயல் புரிந்த கைதிகளைப்போல, அரசியல் கைதிகளான கம்யூனிஸ்ட் தோழர்களும் கைதி எண்ணுடன் சட்டை அணிய வேண்டும், குல்லா போட்டுக்கொள்ள வேண்டும் என்று சிறைக்காவலர்கள் இழிவுபடுத்தினார்கள். சிறைக்குள் தண்ணீர் இறைக்க மாடுகளுக்குப் பதில், கம்யூனிஸ்ட் கைதிகள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். சாலை போடுவதற்காகப் பயன்படுத்தும் கல் உருளையை இழுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதற்கு கம்யூனிஸ்ட் தோழர்கள் மறுத்தபோது, அவர்களை மோசமான வார்த்தைகளால் சிறைக்காவலர்கள் பேச, பதிலுக்கு கம்யூனிஸ்ட் தோழர்கள் பேச, அது வாக்குவாதமானது.

அதையே காரணமாக வைத்து, 11.2.1950 அன்று, சேலம் மத்திய சிறையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 22 பேர் கொல்லப்பட்டனர். வாட்ஸ்அப், ட்விட்டர், ஃபேஸ்புக் எதுவும் இல்லாத அந்தக் காலத்தில், சேலம் சிறையில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு நடந்த கொடுமையை ஊர் ஊருக்கும் மேடை போட்டு பொதுமக்களிடம் கொண்டுசென்றன, திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும். பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த, அந்த சேலம் சிறைப் படுகொலைகளின் நினைவாகத்தான் 22 தியாகிகளுக்கு நினைவுத்தூண் அமைக்க அடிக்கல் நாட்டியிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்’ எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### செம்மொழி நடைப்பயணக்குழு சந்திப்பு!



குணா

**த**மிழ் மொழியைச் செம்மொழியாகவும் திருக்குறளை தேசிய நூலாகவும் அறிவிக்கக் கோரி, தஞ்சாவூரைச் சேர்ந்த தமிழார்வலர்கள் குழுவினர் என் தலைமையில் ‘செம்மொழி நடைப்பயணக் குழு’ என கன்னியாகுமரியில் 23.11.2003 அன்று நடைப்பயணத்தைத் தொடங்கினோம். புதுச்சேரி வழியாக 47-வது நாளில், 08.02.2004 அன்று சென்னை வந்து சேர்ந்தோம். நடைப்பயணக் குழுவினரை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்த கலைஞர், எங்களின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்தினார்.

**- உடையார்கோயில் குணா,**
**நிறுவனர், தமிழ்த்தாய் அறக்கட்டளை,**
**தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### முறைப்படி அணிகள் அமைப்பு!

1980-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 2-ஆம் நாள், திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் தி.மு.கழக பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டதிட்ட விதிகள் பிரிவு 9-இல் திருத்தம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தி.மு.க. தொண்டர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இலக்கிய அணி ஆகியவை முறைப்படி அமைக்கப்பட்டன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.